Subscription
Inland : Rs. 50/ per year.
For Advertisements
Apply to:
The Manager
Morning Star, Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q/… News / 87
Establishd : 1841 : A Christian … : Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 18th & … mber 1988 Nos. 34 & 35
RIGHTEOUSNESS EXALTETH A NATION BU… A REPROACH TO ANY PEOPLE

UNDELIVERD ISSUES
Please re-address
all undelivered issues
of the MORNING STAR to
The Manager,
"Morning Star"
Vaddukoddai.

## CAROL FESTIVAL BY THE YOUTH OF THE NORTH

The Fortieth Annual Festival of Carol Singing presented by the Youth of the North took place on Saturday morning, 5th November at 9 a.m. The well-rehearsed combined choirs led the congregation in the rousing carol "Masters in this Hall," to open the festivities. Every number of the combined choirs, English and Tamil, was beautifully performed, as if the massed choirs were a much smaller and more manageable ensemble. Particularly joyful was the Caribbean number, "The Virgin Mary had a Baby Boy"

All the choirs made a well-disciplined impression, although some a e better blessed with fine voices. The combined choirs of, St.Patrick's and the Convent opened the program of individual choir selections with "Rise in Joy, Jerusalem," followed by the Jaffna College choir with, Rise, Shine,"featuring a clarion solo by Vasuki Rajasingham. The Tamil numbers this year sounded uniformly convincing, and a particular highlight of the Uduvil Eastern Orchestra and the Tamil song sung by the Campus Singers was the flute accompaniment of Miss Keshini Das. The St. John's and Chundukuli Choirs delived a powerfull "All Hail the Power," and the Uduvil Girls finished us off with a superb Beethoven 'Hallelujah.''

It was a pleasure to see new faces at the conductor's stand this year- Mrs. Kamalanathan leading the English singing,and Miss T.Kirubamani very capably leading the Tamil singing and the Eastern orchestra. However, we missed the Western orchestra this year as well as the smiling good cheer of the previous director, Mr. Jeyasingh David.

This reviewer sees no reason why each choir should not be identified on the program, as everyone would like to have his curiosity satisfied on this point. Why should it have to be a matter of disturbing whispered inquiry during the program? It could not have possibly detracted from the Christmas spirit of the concert, which, despite the high quality of performance, seemed to lack a certain Seasons sparkle. The Rev. Dr. S. M. Selvaratnam of the OMI Fathers Communications Centre delivered the message in Tamil on the theme of unity between people through the Birth of Christ.

R.P.

## PRESENCE OF IPKF CAN MAKE DIFFERENCE AT N & E ELECTIONS

Speaking at the Rotary Club of Colombo meeting at the Hotel Galadari Meridien on Wednesday, Professor Ralph Buultjens urged the body politic of the country to address itself to evolving national solutions to the country's problems rather than come up with 'Party solutions to national problems. stressed the fact that the Indian army in occupation in the North and East which contains some 1·5 million voters could make a difference at election. "History tells us that where there has been an army in occupation, a free and fair election is difficult.

"We must have elections which are above suspicion. The point made here is that a part of our electoral system is out of our control." he said.

Professor Buultjens also called for a serious assessment of our relationship with India - and what it is to be in the future... "if we are to be a viable society".

"Sri Lanka's relationship with India, now and in the the future of democracy in Sri Lanka, were factors which demand very serious essessment," he said.

With the national focus now on imminent elections, he said it was an immediate imperative that an effective elections monitoring mechanism be instituted.

— Prof Buultjens

## John Moothathamby SABARATNAM

### A Tribute at the memorial Service at St. John the Baptist's Church, Chundikuli, on 15th October 1988.

I feel privileged to share in this Thanksgiving Service for the life and work of the late J. M. Sabaratnam. He was an efficient administrator, a God-fearing Christian, a concerned social worker and ardent advocate of Christian education.

Mr. Sabaratnam was born on the 10th of December 1913. He had his schooling at St. John's College, and in recognition of his leadership qualities, he was appointed Prefect He studied for a year at Jaffna College in the London Intermediate Class, and moved on to the University College, Colombo. He passed the London B. A, Examination in the second division in 1936, the University College, he was Editor of the Magazine, and member of the Executive Committee of the Tamil Society

He taught at the Pembroke Academy for two years, and having passed the Selection Examination for Divisional Revenue Officers, joined Government Service in 1939. His service in Government was notably meritorious. In 1953, when Queen Elizabeth visited Ceylon, he was one of the few who was awarded the 'Queen Elizabeth II. Medal for Merit.'' In 1957 he was specially commended. The citation by the Government Agent of the Eastern Province, D. G. L. Manamperi, reads as follows: 'Commended for most exemplary devotion to duty, and for the utmost initiative, efficiency, and energy in organising rescue and relief measures during the 1957 floods." In 1960, the Director of Administrative Training H. S. Wanasingha wrote: "I consider Mr. Sabaratnam to be one of the most sound, reliable, and capable officials I have worked with in the last 21 years." It was no wonder that Mr. Sabaratnam was promoted to the Administrative Civil Service. Later, when he was Additional Government Agent, Jaffna, Mr. F. C. Pietersz, the G. A., wrote: "I was able to delegate to him, without the slightest hesitation, subjects which I myself would normally have handled. His maturity of judgement, initiative, sense of responsibility, integrity, and devotion to duty, were as much as, or rather more than, what one would expect of a public servant". This is a very high accolade indeed, since Government Heads are not allowed to indulge lightly in superlatives. Mr. Pietersz recommended that Mr. Sabaratnam should succeed him as Government Agent of Jaffna. Mr. Sabaratnam was indeed Acting Government Agent, but before he could become permanent, the 55 year retirement rule intervened. In recognition of his services, he was appointed Justice of the Peace. After retirement too, his aptitude in the despatch of business continued. During my term as Manager of St. John's College (1985-1987) a land was gifted to the College but as the land had changed ownership five times in fifty years, I sent the deeds to Mr. Sabaratnam for scrutiny. A written report, lucid and full, was in my hands the next morning. Again this year, on the 8th of June, an Executive Committee decided that an important letter should be sent to an errant employee: The next day saw the letter sent by Registered Post. That was Mr. Sabaratnam, all long.

Secondly, wherever Mr. Sabaratnam worked, he went to Church regularly, where possible with his family, and took part in the activities of the Church, and held office. It is notable that he was a member of the Executive of the J. D. C S, I. and a Warden in this Church, the Church of St. Johns Baptist. To many people, the Church means a place of worship and social gathering; to Mr. Sabaratnam, it was also a militant organisation which should be on the march, to help the needy and to spread the gospel. That explains his membership and the many offices he held in the Gideons, Y's Men's Club,and the YMCA. He was also Charter President of the Lions' Club of Jaffna.

Thirdly, when in 1983, the July riots caused the refugee problem, the G. A. called upon Mr. Sabaratnam to organise rehabilitation of the refugees. As Treasurer of the Refugee Rehabilitation Organisation (RRO - 83) he handled millions of rupees: and helped the refugees of 1983 as well as the refugees of the LTTE - IPKF campaign in 1987. Many who had lost their wage earners were set up in self-employment. They were given, according to their skills and needs, sewing machines, bullock-carts and bulls and milch cows, besides gifts for immediate relief packs of clothing and packs of dry rations. When gifts were sent by agencies abroad, he acknowledged receipt promptly, sent reports of disbursement, and also audited statement of accounts. This won the confidence of the aid agencies, and his appeals for help received the most consideration.

Fourthly, he was attached to the Schools he studied in- St. John's College, and Jaffna College. He become a member of the Board of Directors of Jaffna College in 1949, and held for about 40 years various offices, - Manager of Jaffna College, Secretary, Chairman and Authorised Representative of the Board of Directors, At St. John's College he was a member of the Governing Body in Colombo as well of the Joint Committee in Jaffna. At the time of his death, the was Chairman of the Jaffna College Board of Directors, Manager of three Schools - Chundikuli Girls' College, St. John's College, and Jaffna College. He was also Director of the Jaffna Academy, and a member of the Advisory Committee of Nuffield School.

By his long association with schools and education, he got the priorities in education right

(Continued 4th Page)

# உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது
நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 18, 25-11-1988 இதழ் 34, 35

**அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகம்**

மீண்டும் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு,

182ம் இலக்கத்தில் அமைந்துள்ள திருமறை இல்லத்தில்

1988ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி காலை

யாழ். தென்னிந்திய திருச்சபையின் பேராயர்

அதி. வண. D. J. அம்பலவாணர் அவர்களினால்

குதூகலமாக ஆரம்பிக்கப்பட்டது


## யாழ். கல்லூரியின் புதிய அதிபர்

**யா**ழ். கல்லூரியின் புதிய அதிபராக, டாக்டர் எஸ். ஜெபநேசன் அவர்கள் ஒக்டோபர் மாதம் இருபத்தொன்பதாம் நாள் நியமிக்கப்பட்டார். இந்நியமனத்தை நாம் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். கடந்த 165 ஆண்டுகளாக இந்நாட்டில் குறிப்பாகத் தமிழ் சமுதாயத்திற்கு தலைசிறந்த கல்விப் பணியாற்றிய யாழ். கல்லூரி தன் புதியஅதிபராக அறிவர் ஜெபநேசன் அவர்களைப் பெற்றமையிட்டு, தமிழ்ச்சமுதாயம் மிக்க மகிழ்ச்சியடையும் என்பது நிச்சயம்.

கிறிஸ்தவ நிறுவனங்களில் முக்கியமான பொறுப்புக்களை ஏற்பதற்குத் தகுந்த தராதரமுள்ளவர்களைப் பெறமுடியாத இந்நாட்களில், அதிபர் ஜெபநேசன் போன்ற தகுதி வாய்ந்த ஒருவரை யாழ். கல்லூரி தனது அதிபராகப் பெற்றதையிட்டு இக்கல்லூரியின் ஆட்சிக்குழுவைப் பாராட்டுகிறோம்.

அதிபர் ஜெபநேசன் அவர்கள் பரந்த அறிவு படைத்தவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் சொற்பெருக்காற்றுவதில் வல்லவர் கல்வித் துறையில் பல பட்டங்கள் பெற்றவர். கிறிஸ்தவ இறையியல், கலை தத்துவப் பட்டங்களும் பெற்றவர். யாழ்.பல்கலைக் கழகத்தில் 'டாக்டர்' பட்டம் பெற்று இலங்கை அமெரிக்க மிஷன் வரலாற்றில் இந்நாட்டிலேயே தலைசிறந்த அறிஞராகத் திகழ்கின்றார் என்பது மிகையாகாது.

அதிபர் ஜெபநேசன் அவர்கள் திருச்சபையிலும் பெரும் ஈடுபாடு உடையவர். மக்கள் மனத்தில் ஆழமாகப் பதியத்தக்கவாறு அருளுரையாற்றும் திறமை வாய்ந்தவர் இவரின் சமயக்கருத்துக்கள் குறிப்பாக வாலிபரை இறைவன் பால் கவர்ந்திழுக்கும் சக்தி வாய்ந்தவை. இவர் யாழ். கல்லூரியின் உப அதிபராக இருந்த காலத்திலேயே சுன்னாகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் விரிவுரையாளராக கடமையாற்றிவந்தார்.

புதிய அதிபரை வாழ்த்தும் இச் சமயத்தில், யாழ். கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. அ. கதிர்காமர் அவர்கள் 1968 ஆம் ஆண்டு தொட்டு, இக்கல்லூரியின் அதிபராக ஆற்றி வந்த சிறந்த கல்விப் பணிக்காக அவருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைக் கூறுகிறோம். இவரின் காலத்தில் பலமாற்றங்கள், பல தடைகள் விவரிக்கமுடியாதபல தொல்லைகள் இக்கல்லூரிக்கு ஏற்பட்டன. இருந்தும், மனஞ் சோராமல் தளராமல், கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருந்து தனக்களிக்கப்பட்ட பொறுப்புக்களை சிறந்த முறையில் நிறைவேற்றியது இங்கு குறிப்பிடத் தக்கது.

முன்னாள் அதிபர் கதிர்காமர் அவர்களின் சிறந்த அறிவுரைகளையும் நற்பணிகளை உலகெங்கும் பரப்பியுள்ள அவரின் மாணவர்கள் எப்பொழுதும் நன்றி நிறைந்த இதயத்துடன் போற்றுவார்கள் என்பது நிச்சயம். இவர் தமது ஓய்வு நாட்களை, சுன்னாகத்திலுள்ள கிறிஸ்தவ இறையியற் கல்லூரியில் பதிவாளராகவும் விரிவுரையாளராகவும் கடமையாற்ற இசைந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். இவர் நமது பேராயத்தின் பல துறைகளில் செய்து வந்த பணிகளை நம் மத்தியில் வாழ்ந்து செய்யத் தொடங்கியுள்ளார். இவருக்கும், புதிய அதிபர் செபநேசன் அவர்களுக்கும் எம் அன்புகனிந்த வாழ்த்துக்கள்.

D. R. A.

### யாழ். கால்லூரியின் முன்னாள் அதிபர்கள்

| | | |
|---|---|---|
| 1 | டானியெல்பூர் | — 1823 — 1836 |
| 2. | H. R. ஹொஷிக்டன் | — 1836 — 1849 |
| 3. | E. P. ஹேஸ்டிங்ஸ் | — 1849 — 1855 |
| | " " | — 1872 — 1889 |
| 4. | S. W. கௌலண்ட் | — 1889 — 1897 |
| 5. | ஹிச்கொக் | — 1897 — 1899 |
| | " " | — 1905 — 1908 |
| 6. | R. C. ஹேஸ்டிங்ஸ் | — 1889 — 1904 |
| 7. | G. G. பிறவுன் | — 1908 — 1915 |
| 8. | ஜோன் பிக்னெல் | — 1916 — 1936 |
| 9. | எஸ். கோ. பங்கர் | — 1937 — 1947 |
| 10. | K. A. செல்லையா | — 1947 — 1966 |
| 11. | S. V. பாலசிங்கம் | — 1964 — 1968 |
| 12. | V. கதிர்காமர் | — 1968 — 1988. |

## காய்கறிகளை உண்ணுங்கள்

### 1. முருங்கை

நமது நாட்டில் உணவில் சேர்த்துக் கொள்ளப்படும் சுவைமிக்க முக்கியமான காய்கறிகளில் முருங்கைக்கு முக்கிய இடம் உண்டு. இதன் மணமும் சுவையும் அனைவராலும் விரும்பப்படுகிறது. முருங்கையின் காய், இலை, பூ, மொட்டு போன்றவற்றைத் காய்கறியாகச் சமைத்து உண்ணலாம்.

முருங்கையில் புரதம், இரும்பு இகர தாது உப்புகள் மற்றும் வைடமின் B, C முதலியவைகள் அதிக அளவில் இருக்கின்றன மரத்தின் பட்டையை மருந்துக்குப் பாவிக்கலாம் பிசின் (Gum) தயாரிக்கலாம். முருங்கை விதையிலிருந்து உற்பத்தி செய்யப்படும்.

எண்ணெய் மணிக்கூட்டுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. விதைகளை பொரித்தும் சாப்பிடலாம்

### பல வகை முருங்கைகள்

முருங்கையில் பல இனங்கள் உள்ளன. இவற்றில் முக்கியமானது யாழ்ப்பாண முருங்கை. இந்த இனம் தமிழ் நாட்டில் அதிகமாக விரும்பப்படுகிறது. இதன் காய்கள் 2 முதல் 3 அடி நீளமிருக்கும். நிறைந்த சதைப் பிடிப்பு கொண்டது சுவை அதிகமாக இருக்கும்.

செம்முருங்கை என்ற ரகமும் பயிர்செய்யப்படுகிறது இதன்நுனிப் பாகம் சிவப்பாக இருக்கும் வருடம் முழுவதும் பூத்துக்காய்க்கும் விளைச்சலும் அதிகமாகக் கிடைக்கும்.

அடுத்ததாக காட்டு முருங்கை என்றவேறொரு இரகம். இது காட்டில் தானுக வளரும் மரங்கள். சிறிய காய்கள் இது கிளைகளை நேராக அரை அடி பூமியின் உள்ளே உள்ளவாறு நடவும் உடனே தண்ணீர் ஊற்றவும்.

பின்பு வாரம் ஒரு முறை நீர் பாய்ச்சவும், அதிக காற்று இருக்கும் பகுதியாக மரத்தின் அடிப்பாகத்தில் மண்அணைக்கவும். கிளைகள் முளைத்து வேர்ஊன்றிச் செடிகள் மரமாக வளர்ந்த பின்பு நீர் பாக்ச வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாக முருங்கை வரட்சியைத் தாங்கக் கூடியது எனவே, மழை பெய்தாலும் கவலையில்லை.

தண்ணீர் வசதியிருந்தால் 10 நாளுக்கு ஒரு முறை பாய்ச்சலாம். வயதான மரத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கிளைகளை அதிகமாக்க மரத்தின்மேல் பாகத்தை வெட்ட வேண்டும்.

கிளைகள் நட்டு 6 முதல் 8 மாதம் கழித்துக் காய்கள் பறிக்கத் தொடங்கலாம். முதல் இரண்டு வருடங்களுக்கு குறைந்த அளவு காய்களே அதாவது ஒரு வருடத்தில் ஒரு மரத்திலிருந்து 80 முதல் 90 காய்கள் கிடைக்கும். மூன்றுவது வருடத்தில் ஒரு மரத்திலிருந்து 500 முதல் 600 காய்கள் கிடைக்கும். காய் அறுவடைக் காலம் சீதோஷண நிலைக்கேற்றவாறு மாறுபடும்.

பொதுவாக ஜூன் முதல் செப்டம்பர் வரையும், மற்றும் மார்ச் ஏப்பிரல் மாதங்களில் அறுவடை செய்யலாம். சில இடங்களில் ஏப்பிரல் மே, மற்றும் நவம்பர், டிசம்பர் மாதங்களிலும் அறுவடை செய்யலாம்.

நாம் நன்குக பராமரித்தால் முருங்கை 15 முதல் 20 ஆண்டுகள் வரை இருக்கும். இருப்பினும் 8 அல்லது 10 ஆண்டுகளுக்கொரு முறை புதிய கிளைகளை நடுவது நல்வது.

முருங்கையில் பூச்சிபிடிக்காமல் இருக்க மாலதியான் 2 மி. லீ மருந்தை 1 லீட்டர் நீர் என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கவும்.

### ஏழைகளின் தோழன்......

(முற்றொடர் 28- 10- 88)

என்னசெய்வதென்றறியாமலே இவர் ஓர் கிறிஸ்தவன் என்ற படியால், நாலடியாரின் பாட்டென்று தான் என ஞாபகத்திற்கு வந்தது.

"அறுசுவை உண்டி
அமர்ந்தில்லாள் ஊட்ட
மறு சிகை நீக்கி உண்டாகும்
- வறிஞராய்ச்
சென்றிரப்பார் ஓரிடத்துக்
கூடமெனின் செல்வம் ஒன்று
உண்டாக வைக்கற்பாற்றன்று'

நாலடியார்

மனைவியானவள், முன்னர் அமர்ந்திருந்து முகமலர்ச்சியோடு உணவினை ஊட்ட "மறுகவளம்

(3 ம் பக்கம் பார்க்க)


Jaffna College
Iustitute of Technology
VADDKODDAI

MASONRY COURSE

கட்டிட நிர்மாண பயிற்சி வகுப்புகள்

எமது இளைஞர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் "CARE INTERNATIONAL" ஸ்தாபனத்தின் உதவி உடன் மார்கழி மாதம் முதல் தேதியில் மீண்டும் ஆரம்பமாகின்றன.

காலம் — 2 1/2 மாதங்கள்

ஆர்வமுள்ள மாணவர்கள் உடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். ஒழுங்கான பயிலுநர்க்கு நாளந்த ஊக்குவிப்புப் படியாக ரூபா. 25/- வழங்கப்படும்.

பணிப்பாளர்

### தாரகை ஒளி

முடியந்தக்க வழியில் முயலாத முயற்சி பலர் கூடிப்பாது கத்தாலும் தவறுபடும்.

# எங்கள் கருத்து

## சமயம் கடந்த நட்புறவு

இயேசு பெருமானின் அன்புறவுக்குத் தகுதியற்றவர்களென எவரும் ஒதுக்கப்பட்டதில்லை. ஒழுக்கக்கேடுகள், சமுகப் பிரிவுகள், சமய வேறுபாடுகள் ஆகியவற்றைக் கடந்து, இயேசு மக்களுடன் நட்புறவு கொண்டார். எந்தச் சமயத்தின் மேலும் சார்ந்திராத அவர் ஒரு தனி மனிதனுக இதனைச் செய்தார். எனவே, நற்செய்திப்பணியில் ஈடுபடுவோர் திருச்சபை உறவைப் பெரிதெனஎண்ணி அதில் மட்டும் தங்கள் கவனத்தைச் செலுத்திவந்தால், ஆற்றலுடனும் சுயாதீனத்துடனும் பணிபுரிய முடியாது என்பதை அறிக.

கிறிஸ்துபிரானை தன் மீட்பரும் ஆண்டவருமாக எற்றுக் கொண்டவன் புதிய மனிதன். அவன் சாதாரண நல்ல மனிதனைவிட, அதிக ஆற்றலும் நீதியும் உடையவனுய் வாழவேண்டுமென உலகம் எதிர்பார்க்கின்றது. ஆகவே, இன்று தம்மைக் கிறிஸ்தவர்கள் என்றும், புதுவாழ்வைத் தாம் பெற்றுரேமென்றும் கூறுகிறவர்கள், ''நல் வாழ்க்கை'' என்றதரத்திலும் கீழ்ப்பட்டிருந்தால் நாம் என் செய்வது? விசுவாசி என்ற பெயரில் பிரிந்து வாழ்வதைவிட மனிதன் என்ற முறையில், அனைவருடன் நட்புறவுபூண்டு வாழ்வதே சிறப்பு.

கடந்த சில ஆண்டுகளாக நம் நாட்டில், சாதி சமய இன வேறுபாடின்றி அனைவரும் மாறி மாறி தாங்கொணுத் துன்பங்களுக்குள் ஆளாகி வருகின்றனர். கடந்த சில மாதங்களாக வடக்கிலும் தெற்கிலும் நாள்தோறும் பலர் கொல்லப்பட்டும், தங்கள் அன்பானவர்களைஇழந்தும், உறைவிடம், உடைமைகள் அனைத்தையும் பறிகொடுத்தும் தவிக்கின்றனர். இன்று இந்த நாட்டில் பெரும்பாலானோர் எவ்வித பாகுபாடுமின்றி பெற்றுக் கொண்டிருப்பது துன்பமும் தொல்லையும் தான்.

இத்தகைய சூழ்நிலையில் உள்ள நாம் சாதி சமய இன வேறு பாடின்றி ஒன்று படவேண்டும். இத்தடைகளைத் தாண்டி அனைவருடன் நட்புறவு கொள்ளவேண்டும். சமயங்களிடையே இந்த நட்புறவு இல்லாத காரணத்தால் தான் முன்னர் பல போர்கள், கொடுஞ்செயல்கள் நடைபெற்றன. இது வரலாறு கண்ட உண்மை. ஆகவே, இந்த நிலையை மாற்ற, கிறிஸ்தவர்கள் முன்வரவேண்டும். இதுவே, நாம் நாட்டிற்குக் கூறும் நற் செய்தி.

நாம் ஆகாயத்தில் வாழும் கிறிஸ்தவர்களல்ல. இந்நாட்டு கிறிஸ்தவர்கள். ஆகவே, இந்த நாட்டின், குறிப்பாகத் தமிழ் பகுதிகளின் அபிவிருத்திப் பணிகளில் நமக்கு பங்குண்டு. இன்று நமது மக்களிற் பெரும்பாலனோர் வறுமைப் பிணியால் பீடித்துத் தவிப்பதை நினைவுகூருங்கள். பவுல் அடியார் தான் நற்செய்தியைப் பெற்றபோது '' வறுமையிலிருப்போரை நினைத்துக் கொள்ளும் படியான '' கட்டளையையும் பெற்றதாகக் கூறினுர் ( கால. 2 ; 10. ). எனவே பஞ்சத்தால் வாடியிருப்போருக்குப் பணம் வசூலித்து அனுப்புவதும் அவரது நற்செய்திப் பணியில் ஒரு பகுதியாயிற்று.

சாதி சமய இனவேறு பாடுகளைக் கடந்து, நமது டங்களிப்பை அளிப்பது, நாம் நற்செய்தியால் பெற்று வந்ததின் விளைவே. இந்த ஒருமைப் பாட்டிற்கு ஒவ்வொரு சமயமும் ஒத்துழைக்க வேண்டும். இதற்கு இதர சமயங்களுடன் உரையாடல் நடத்தினுல் தான், அவர்களுடன் நட்புறவு கொள்ளமுடியும். கிறிஸ்தவர்களாகிய நாம் புதிய கண்களோடு பிறசமயங்களை அணுகவேண்டிய காலமிதுவே.

### ஏழைகளின்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டா'' என்று நீங்கி உண்ட செல்வரும் ஒரு காலத்தில் வறியவராகி வேறிடம்சென்று ''கூழாவது தருக'' என்று இரந்துண்பார், அகவே செல்வமானது நிலையாகாது என்பதை இந்த அவனியில் வாழும் கிறிஸ்தவ மக்களும், ஏனையமக்களும் உணரவேண்டும் என்பதே.

ஆகவே செல்வந்தர்களே ஆண்டவர் இயேசு பெருமான்கூறும் வார்த்தைகளைச் சிந்திக்கிறீர்களா? அவர் உங்களுக்கு இடும் கட்டளை என்ன ஒருவனுக்கு எவ்வளவு திரளான செல்வம் இருந்தாலும் அது அவனுக்கு வாழ்வு அல்ல ( லூக்கா : 12 : 15 ) ஆகவே நீங்கள் இயேசுவானவரின் பிள்ளைகள் என்பதை நக்காட்டுவதாயின் பணத்தின் அடிமைதனத்திலிருந்து உங்களை மீட்டுக் கொள்ளுங்கள்.

ஆண்டவர் இயேசு; எங்களை தமது பிள்ளையாக வைத்துக்கொள்வதற்கே எங்கள் வாழ்வைப் பணத்திற்குப்பணயம் வைக்காமல் எங்களை பாதுகாத்துக் கொள்ள ஒரு கதையையே கூறினுர் என லூக்கா 12: 16 - 20 இல் பார்கின்றேம்.

இதோ அவர் சொன்ன கதை:-

பணக்காரன் ஒருவனுடைய வயல் நன்ருய் செழித்து விளைந்தது அப்பொழுது அவன் நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; ஆனுலும் என் களஞ்சிய அறைகளை இடித்து பெரிதாகக்கட்டிஎன் தானியங்களையும் பொருள்களையும், அங்கே சேர்த்து வைப்பேன்; பின்பு என் ஆத்துமாவேஉனக்காக அனேக வருடங்களுக்கு நீ வாழ்க்கூடியதாக அனேக பொருட்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன், நான்இளைப்பாறி புசித்துக் குடித்து மகிழ்ச்சியாக இருக்க, என்று தனக்குள்ளே திட்டம் போட்டுக் கொண்டான்.

கடவுள் அவனை நோக்கி என்ன சென்னுரென்றுல் மூடனே உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இன்று இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் எல்லாம் யாருடையதாகும் என்றுர். தேவனிடத்தில் செல்வந்தனுயிராமல் தனக்காகப் பொக்கிஷங்களை சேர்த்துவைக்கிறவன் இப்படி இருக்கிறுன் என்று சொன்னுர்.

ஆகவே; நாமும் பணத்திற்கு அடிமை கொள்ளாது யேசு வாழ்ந்ததுபோல ஏழைகளோடு ஏழைகளாக வாழவே விரும்ப வேண்டும். இதுவே இறைவன் எங்களிடம் இருந்து எதிர்பார்ப்பது.

ப. லோகநாதன்

### செய்திகள்

#### புதிய ஊழியன்

அச்சுவேலித் திருச்சபையின் போதகர் அருள் திரு வி. இராஜ்குமார், சாவகச்சேரி சபையின் பொறுப்பை இம்மாதம் 1ம் திகதி ஏற்றிருக்கிறுர். அச்சுவேலிச்சபைக்கு திரு J. ஞானப்பிர்காசம் ஊழியனுக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. ஞானப்பிரகாசம் கடந்த நான்கு ஆண்டுகளாக சுன்னுகத்திலுள்ள இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில், இறையியல் கற்று, குருத்துவ ஊழியப் பயிற்சி பெற்றவர்.

#### புதிய பதிவாளர்

இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் புதிய பதிவாளராக திரு. A. கதிர்காமர் அவர்கள் நியமிக்கப் பெற்றுர். இம்மாதம் 1 ஆம் திகதி இவர் பதிவாளர் பொறுப்பை ஏற்றுர். திரு. கதிர்காமர் யாழ். கல்லூரியின் அதிபராக கடந்த இருபது ஆண்டுகள் கடமையாற்றி கடந்த ஒக்டோபர் மாதத்தில் ஓய்வு பெற்றுர்.

புதிய பதிவாளருக்கு கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மாணவர் வரவேற்பும் இக்கல்லூரியின் பதிவாளராக கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கடமையாற்றிய அருள் திரு C. T. றெபேர்ட்ஸ் அவர்களுக்கு பிரியாவிடையும் அளித்தனர்.

#### மரணம்

சுண்டிக்குளியில் வசிப்பவரும் கிறிஸ்தவ ஊழியருமாகிய திரு. திருமதி S. V. அரியராசா அவர்களின் இரண்டாவது மகன் அல்பேர்ட் அமரேஷ் கடந்த 31ம் திகதி அகால மரணமடைந்தார்.

இவரின் இறுதி ஆராதனை இம் மாதம் 1 ஆம் திகதி சுண்டுக்குளியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. இவரது பூதவுடல் யாழ். கச்சேரியடியில் உள்ள பெந்தெகோஸ்தே சபைக் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

#### யாழ். கல்லூரி புதிய அதிபர் நியமன ஆராதனை

யாழ் கல்லூரியின் புதிய அதிபர் டாக்டர் எஸ். ஜெபநேசன் அவர்களின் நியமன ஆராதனை கடந்த ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி பிற்பகல் 3. 30 மணியளவில் பேராயர் அருள் மிகு டி. ஜே அம்பலவாணர் அவர்கள் தலைமையில் வட்டுக்கோட்டைத் திருக்கோவிலில் நடைபெற்றது.

இவ்வாராதனையில், இக்கல்லூரியின் முன்னுள் அதிபர் திரு. அ. கதிர்காமர் அவர்களும் மத்திய பள்ளி மேற்பார்வையாளர் திரு. G. இராசநாயகம் ஆகியோரும் பங்கெடுத்தனர். பேராயர் அம்பலவாணர் அருளுரையாற்றினுர்.

யாழ். கல்லூரி ஆட்சிக்குழுவின் உயர் பணியாளர், புதிய அதிபரை பயபக்தியாகச் சம்பிரதாய முறைப்படி பேராயர் அம்பலவாணர் அவர்கள் முன் நிறுத்த, பேராயர் அவர்கள் பிரதிஷ்டை செபம் செய்து அதிபர் ஜெபநேசன்அவர்களை யாழ் கல்லூரியின் புதிய அதிபராக நியமித்தார். யாழ். கல்லூரி பாடகர் குழு சிறப்புப்பாடல் பாடி ஆராதனையைச் சிறப்பித்தனர்.

ஆராதனையின் பின் அனைவர்க்கும் தேனீர் விருந்துபசரணை நடைபெற்றது.

#### யாழ். திருமண்டலம் ஆண்டு விழா

தென் இந்திய திருச்சபையின் யாழ் திருமண்டலத்தின் 41 ஆம் ஆண்டு நிறைவு கடந்த மாதம் 22 ஆம் திகதி வட்டுக்கோட்டைத் திருக்கோவிலில், பேராயர் அருள் மிகு டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் அரைநாள் கொண்டாட்டமாகக் நடைபெற்றது.

அன்று காலை 8-00 மணிக்கு வண. V. இராஜ்குமாருக்கு குருஅபிடேகமும் திருவிருந்து ஆராதனையும் பேராயர் அவர்களால் நடத்தப்பட்டது. அதன் பின் காலை 11-00 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் யாழ் புனிதயோவான்கல்லூரிஅதிபர் டாக்டர்E.S.தேவசகாயம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினுர்.

நண்பகல் 12-00 மணியளவில் யாழ். கல்லூரி மண்டபத்தில் கலாச்சார நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கிளிநொச்சி சபை, மாங்குளம் சபை, யாழ். கல்லூரி மாணவர் பங்கு பெற்றுச் சிறப்பித்தனர்.

இதன்பின் அனைவருக்கும்விருந்து பசரணை நடைபெற்றது. இம்முறை ஏராளமான சபையாரும், குறிப்பாக பிள்ளைகளும் வாலிபரும் கலந்து கொண்டாடியது குறிப்பிடத்தக்கது.

EDITORIAL

## SOME REFLECTIONS ON CURRENT EVENTS

The Provincial Council Election in the Eastern Province on the 19th of November 1988 finally raised the curtain on the most crucial political event of our time in our country since Independence, the North East polls.

Polling was witnessed in Batticaloa Paddirruppu Kalkudha Trincomalee Seruvil Mutur Amparai Sampanthurai Kalmunai, and Pottuvil to elect 35 members. The 36 seats in the North were uncontested.

The EPRLF secured 17 seats in the province made up of eight seats, won in Batticaloa four seats at Amparai and five seats at Trincomalee The **Muslim Congress** matched the performance of its rivals with an equal number of seats (17) made up of nine seats won at Amparai five seats at Trincomalee and three seats at Batticaloa. The UNP contested the election in Batticaloa and Amparai and won a seat at Amparai.

The Eastern Province has a population according to a recent reckoning of some 40 per cent Tamils, 33 per cent Muslims and 27 per cent Sinhalese.

In the five districts of the North. **Jaffna, Mannar Mullaitivu Vavuniya**, and **Kilinochchi**, all seats were uncontested. The E P R L F nominees were elected in Jaffna (19) and Mannar (5) for the 24 seats and the E N D L F nominees in Mullaitivu (5) Vavuniya (4) and Kilinochchi (3) for the 12 seats.

The total picture in the North East Provincial Council Election is now clear. The E P R L F has 41 seats. the E N D L F, 12 seats, the Muslim Congress 17 seats and the UNP, one seat, making the councils strength to 71 members.

In the South, the stage is being set for the Presidential Election to be held on the 19th of December. The Commissioner of Election, Mr. Chandranatha de Silva has, according to news reports, already conferred with high ranking police officials, Government Agents and for the first time in the history of elections in Sri Lanka with thePresidential Candidates themselves about security arrangements for the peaceful conduct of the Election. The candidates are Mr. R. Premadasa Mrs. Sirima Bandaranayake and Mr. Ossie Abeyagunasekara.

On the front page of the **Veerakesari** of 22-11-88 which flashes the news of this conference are also some unsavoury news reports of **Panadura** and **Pollonaruwa** plunged in darkness: of Matara in the grip of a food and fuel shortage: of Ratnapura where major scandals have ruffled feathers resulting in eight people including some in high places arraigned for trial in Colombo for murder of Estate workers who had lost ten days wages in the month of November because of work stoppage and of the suspension of bus services in a vital transport link between Colombo and the estate areas of Hatton Nuwareliya and Badulla. Events in the extreme South appear to have the complexion of an almost full-blown national crisis

What is most galling was the impact of the political crisis in the land, on EDUCATION. According to an article in the Sunday Times of 21-10-88, a staggering 19, 986. University students are "out in the streets" and the future of 38,000 to 40,000 school children is uncertain. The number of candidates who have enrolled or the G. C. E. (O/L) Examination 1988 is 58,284 of this number 34,349 students are, we told, are from the Jaffna District

In this context, an address of the Minister of Education, Mr. Ranil Wickremasinghe to the Colombo Rotary Club, on the student unrest in the island reflected how wantonly the political cloud in Sri Lanka had eclipsed the sun Concluding his address in a glum note, the Minister said.

> "We will see to holding of elections and open up the scho system. I don't think it is possible to open the universities The University system collapsed in the past four years but not so the schools" (Sunday Observer) 30-10-88

The picture is grim. Some reasons have been given for this involvement of students in the political conflict under the title "We have reached a moment of decision". A writer in one of our national dailies ascribes the student unrest to the white paper on Education and the continuous assessment scheme" which have made many children drop out of school because of the added cost. When householders doubtless are today afloat in a turbulent sea of inflation.

On the subject of University Education news reports have it that the University Grants Commission hopes to get Rs. 450 million for University Education during the current year which represents 0·7 per cent of our G.N.P. of this amount Rs. 250 million has been earmarked for the construction of student hostels which is now a sore point with the student body of the University.

On these matters of unending controversy and irritation, we do not like to enter here. What is now necessary is to reverse the twilight of our school going children in education now in Sri lanka. They should be able in Addisson's words, " to sail by some compass, live according to a design, " in the formative period of their life, instead of drifting aimlessly and at times violently in a turbulent ocean of unrest, which likef prairie fire has no determined goals.

It is an odd fate of Sri Lanka today that at a time o grave crisis, strongly contrasted scenes characterise the life of the Nation. Randenegala the largest of the Mahaweli reservoirs was commissioned on 31-10-**88** ironically at a time, when Education, which alone can provide the social and the techinical training content necessary for the project was in turmoil.

The Bureau of Foreign Employment was we read, concerned with the Sri Lankan House Maids rights being allegedly volated in the Gulf States. But some of the human atrocities currently reported in our national dailies are worthy of Shakespeares bloodiest horror plays as Titus Andronicus. The history of any eivil war war is full of ironies.

Politically and economically we are tending to become a bleeding country Economically the budget deficit we are told, is **51** billion rupees politically the gun crisis has taken a heavy toll of life in the land. Nothing can be forecast in Sri Lanka with any reasonable degree of accuracy unless there is a clear concensus emerging in the country about just what "a political solution" means in the context of our contemporary political crisis.

---

(Continued fist Page)

He bemoaned the fact (i) that trade union attitudes were creeping into our schools, (ii) that people were forgetting that the children were the central subject of the educational enterprise, (iii) that building up persons was lost sight of in the preoccupation with putting up buildings (iv) that the personal attention children got was getting scantier and scantier.

Of course, he also acquired a technique for dealing with difficult situations and people. The Romans had a saying: 'Suaviter in modo, fortiter in reu'. Be save, gentle or tactfuf in words and manner; but be resolute or firm in deed or action." M. Sabaratnam was an incarnation of this wisdom.

(Continue Next Issue

Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka undet No. Q/J/64/News /87)

Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182, 1st, Cross Street Jaffna on Friday, November 1988 and publi shed by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road Jaffna.